ராஜதானியிலிருக்கின்றன. சாதாரணமாக நஞ்செய் பிரதேசங்களில் சிறு கிராமங்களிலும்கூட ஒரு சிறு நெல் குத்தும் மில்லை நாம் பார்க்கலாம். அரிசி குத்தும் மில்கள் பரவினதால் ஜனங்களிடை பல மாறுதல்களும் எற்பட்டிருக்கின்றன. நல்ல ரஸ்தாக்கள் ஏற்பட்டு, மோட்டார் பஸ் வண்டிகள் போகவர சௌகர்யம் ஏற்பட்டிருப்பதால் தூரமான கிராமத்திலிருந்தும் சிறிது வாடகை கொடுத்து அரிசியை மில்லுக்குக் கொண்டுவந்து கிராமவாசிகள் குத்திக்கொண்டு போகின்றனர். மலிவான மின்சாரசக்தி வந்திருப்பதாலும் மில்களை நடத்த அனுகூல மேற்பட்டிருக்கிறது. ஜனங்கள் சோம்பேரித் தனத்தால்தான் மில்லுக்கு நெல்லைக் கொண்டு போய் குத்துகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நெல்லை வீட்டில் குத்துவது கஷ்டமா? முக்கால்படி நெல்லைக் குத்தவேண்டுமானால் உலக்கையால் 300 அல்லது 400 தடவை குத்தவேண்டும். இதைக் குத்த பத்து நிமிஷம் பிடிக்கும். குத்தின பிறகு எறக்குறைய அரைப்படி அரிசி கிடைக்கும். பிறகு இதைப் புடைக்கவேண்டும். ஒரு குடும்பத்திற்கு வேண்டிய அரிசியை ஒரு மணி நேரத்தில் இரண்டு பெண்கள் சேர்ந்து இவ்விதம் தயார் செய்யலாம். அரிசி சாப்பிடுவோர் ஒவ்வொருவரும் தினமும் நெல்லை வீட்டிலேயே குத்திச் சாப்பிட்டால் நெல்லைக் குத்தப் பத்து நிமிஷத்திற்குமேல் பிடிக்காது. கிராம ஜனங்களுக்கு அரிசியைக் குத்தப் போதுமான ஒய்வு நேரம் இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் நெல் குத்துவதில் கழித்த நேரத்தை இப்போது பெண்கள் வீண் செய்கிறார்களென்று தான் சொல்லவேண்டும். அதற்குப் பதிலாக ஒரு சமயம் நெல்லை மில்லுக்கு எடுத்துச்சென்று குத்திக்கொண்டு வருவதில் தங்கள் காலத்தை அவர்கள் கழிக்கலாம். இது அவ்வளவு கஷ்டமல்ல. சிலவிடங்களில் மிலலுக்குச் சொந்தக்காரர்கள் கிராமம் கிராமமாய்ச் சென்று வண்டியில் நெல்லை ஏற்றி மில்லுக்குக் கொண்டுவந்து அதை அரிசியாகக் குத்தி மறுபடியும் அரிசியை அவர்கள் வீட்டிற் கனுப்புகின்றனர் இதற்காக சொற்ப கூலியே வாங்கிக்கொள்ளுகிறார்கள். மற்றும் சில இடங்களில், மில்லுக்குச் சொந்தக்காரன் தவிட்டை யெல்லாம் எடுத்துக்கொண்டு இலவசமாக நெல்லைக் குத்திக் கொடுக்கிறான். இதை லாபமென்று பல கிராம ஜனங்கள் எண்ணி, தங்களுக்கு அடுப்புக்குவேண்டிய உமியையும் புஷ்டிக்கு வேண்டிய தவிட்டையும் இழக்கின்றனர்.

தனது வேலையைக் குறைக்கவே மனிதன் யந்திரத்தைக் கண்டுபிடித்தான். ஆனால் நெல்லைப் பொருத்தமட்டில் அவனுடைய வேலையில் அதிகக் குறைவு ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் புஷ்டியற்ற உணவினாலும் வியாதியினாலும் அடிக்கடி நேரும் பிரசவத்தினாலும் பலமிழந்து இளைத்து வேலை செய்ய முடியாமலிருக்கும் கிராமத்திலுள்ள பெண்களுக்கு இந்த மில் வந்தது ஒரு விதத்தில் அனுகூலமாயிருக்கலாம்.

வீட்டில அரிசி குத்துவதற்கு பலவிதமான அசௌகரியங்கள் இப்போது ஏற்பட்டிருக்கிறன். தினம் தினம் வேலைக்குச் சென்று கூலிக்குழைக்கும் குடும்பத்தினருக்கு வீட்டு வேலையை சரிவர கவனிக்கப் போதுமான பலமும் ஒய்வு நேரமும் கிடையாது. கைத்தொழிற் சாலைகளிலும், கரும்பு, தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வோர்களெல்லாருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தக் கஷ்டம் உண்டு.

தற்கால நிலைமையில் ஒரு கூலிக்காரன் அல்லது ஒரு சிறு விவசாயி, எவ்வளவு இச்சைப்பட்டாலும் தனக்கு வேண்டிய நெல்லை வாங்கிக் கையால் குத்திச் சாப்பிட

முடியாது. கிருஷ்ணா கோதாவரி ஜில்லாவில் இது விஷயமாய் உள்ள நிலைமையை டாக்டர் பட்டாபி சீதாராமய்யா குண்ணூர் உணவுச் சத்து பரிசோதனைக் கூட்டத்தாருக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில் விவரமாகத் தெரிவித்திருக்கிறார்.

'வீட்டில் அரிசியைக் குத்தவேண்டுமானால் வீட்டில் நெல்லை மூட்டை கட்டிப்போட்டிருக்கவேண்டும் சிறிய விவசாயிகளுக்கு இரண்டு அல்லது மூன்று ஏக்ராவுக்குமேல் பூமி கிடையாது. அவர்களோ கடனில் மூழ்கியிருப்பார்கள். அவர்கள் வயலில் விளையும் நெல்லைக் களத்திலேயே மொத்தமாக விற்றுவிடுகிறார்கள். இதற்குக்காரணம் அவர்களுக்கு வீட்டில் ஏற்படும் சடங்குகளுக்கு, மாடுகளை வாங்குவதற்கும், வீடு கட்டவும், மற்றும் பல செலவுகளுக்கும் ரொக்கமாகப்பணம் வேண்டியிருப்பதுதான். அறுவடைக்காலத்தில், (ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் விவசாயிக்கு முட்டு வழிச்செலவு ஏற்படுகிறது. நெல்லை விற்றுத்தான் அவன் இச்செலவைச் செய்யமுடிகிறது. ஒரு குடும்பத்தலைவனும் இதேமாதிரி நெல்லை விற்றுக் கடன் வாங்கி அடுத்த அறுவடைக்காலம்வரை காலந்தள்ளி, அறுவடைக்காலத்தில் மறுபடியும் தனது நெல்லை விற்று விடுகிறான். இதனால், ஒரு கிராம வாசியிடம் குத்துவதற்கு நெல்லே இருப்பதில்லை.'' நெல்லை விற்றுவந்த பணத்தைக்கொண்டு மாகாணத்தின் வேறு பாகத்தில் விளைந்த மில் குத்து அரிசியையோ, அல்லது பர்மா, சியாம அரிசியையோ, வாங்கி சாப்பிடுகிறான். இம்மாதிரி நிலைமையிலுள்ள சிறு விவசாயிகளின் தொகை எவ்வளவென்று தீர்மானமாய்ச் சொல்ல முடியாது. என்றாலும், இம்மாதிரியான நிலைமை மாகாணம் முழுதுமே சர்வ சாதாரணமாயிருக்கிறதென்று தெரிகிறது. சிறு விவசாயிகளும், தொழிலாளிகளும், வேலைக்காரர்களும் இம்மாதிரியே கஷ்டப்படுகிறார்கள். "அவர்களுக்கு நெல்லைக் கட்டிப்போட இடமில்லை. நெல்லை வாங்கப் பணமும்கிடையாது. சில்லரையில் நெல்லைக் கடைக்காரர்கள் விற்பதுமில்லை. ஆதலால் ஒரு கிராமவாசி கடைக்குப்போய் தனக்கு வேண்டிய அரைப்படி கால்படி அரிசியைத்தான் வாங்க முடிகிறது. நெல் சில்லரையில் கடையில் கிடையாததற்குக் காரணம் விவசாயிகளும் வியாபாரிகளும் ஒரே தடவையில் தங்களிடமுள்ள எல்லா நெல்லை விற்றுவிடுகிறார்கள். ஆகையால் எந்தக்கடையிலும் ஒரு நாளைக்கு வேண்டிய நெல்லைச் சில்லரையில் வாங்கமுடியாது "மேலும் நெல்லைக்குத்த மூன்று நான்கு சாமான்கள் தேவை. ஒவ்வொன்று ரூ. 1—4—0 விலையுள்ள இரண்டு உலக்கைகள், 4 அணா விலையுள்ள ஒரு சல்லடை, நிலத்தில் புதைக்கப்பட்ட ஒரு கல் உரல் வேண்டும். நெல் குத்த குறைந்தது வீடு எட்டடி உயரம் இருக்கவேண்டும். ஆட்கள் நிற்க ஐந்தடி உயரமும், உலக்கையைத் தூக்கிக்குத்த மூன்றடியும் ஆக எட்டடி வேண்டும். அநேக குடும்பங்கள் குடிசைகளில் வசிக்கின்றனர். ஒரே குடிசையில் அநேக குடும்பங்கள் அடைந்து நெருங்கி வாழ்கின்றனர். இடமில்லாமையே வீட்டில் நெல் குத்த முடியாததற்கு காரணம். வீட்டில் நெல் குத்த வீடு விசாலமாயிருக்க வேண்டும். நெல்லைச் சேர் கட்டி வைக்க இடம் வேண்டும். இந்த சௌகரியங்களெல்லாம் ஏழை தொழிலாளிகளுக்குக் கிடைப்பது அரிது.''

நமது மாகாணத்தில் பல பாகங்களில் சில கிராமங்களில் தற்காலத்தில் நெல் குத்துவதற்கு வேண்டிய கருவிகளும் கிடைப்பதரிதாயிருக்கிறது. சில வீடுகளில் உலக்கைகளை, குத்தும் வேலையில்லாமையால், அடுப்பில் வைத்து எரித்து விடுகிறார்கள். மர உரல்களையும் வெட்டி அடுப்பெரித்துவிடுகிறார்கள். இந்த நிலைமையில், எவ்வளவு தூரம் கைக்குத்து அரிசியை பொது மக்கள் எல்லாரும் சர்வ சாதாரண

மாய் வாங்கிச் சாப்பிடும்படி செய்ய முடியும் என்பதைக் கவனிப்போம். நூறு பவுண்டு அல்லது நான்கு மணங்கு எடை நெல்லை மில்லில் குத்த 2½ அணுக் கூலியும், கையால் குத்த 5½ அணுக் கூலியும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது கையில் குத்துவதற்கு மில்லில் குத்துவதைப்போல் இரண்டு மடங்கு அதிகமாகக் கூலி கொடுக்க வேண்டும். நூறு பவுண்டு நெல்லைக் குத்திஞல் 65 பவுண்டு அரிசி கிடைக்குமென்று வைத்துக்கொள்வோம். இந்த நூறு பவுண்டு நெல்லை வீட்டில் கையிஞல் குத்திஞல் அரிசி சிறிது அதிகமாகக் கிடைக்கும். இருந்தபோதிலும், கைக்குத்து அரிசி மில்லில் குத்திய அரிசியைவிட, 4 அல்லது 5 அணு விலை அதிகமாயிருக்கும். ஆகவே நூறு பவுன் கைக்குத்து அரிசிக்கு 5 முதல் எட்டணு வரை அதிகமாகக் கொடுக்கவேண்டும். ஒருவன் ஒரு மாதத்திற்கு 40 பவுன் அரிசி சாப்பிடுகிருன் என்று வைத்துக்கொண்டால், கைக்குத்து அரிசி சாப்பிடுவதால் அவனுக்கு மாதம் ஒன்றுக்கு அந்த அரிசிக்கு மூன்றணு அதிகமாகச் செலவாகும். நான்கு அல்லது ஐந்து பேருள்ள ஒரு குடும்பத்தாருக்கு கைக்குத்தரிசியிஞல் சுமார் பன்னிரண்டணு அதிகச் செலவேற்படும். இவ்விதம் ஒரு மாதத்திற்குள் பன்னிரண்டணு அதிகம் செலவழிக்க இந்தியாவில் ஏழைகளால் முடியாது. மேலும் மில்லில் குத்திய அரிசி அயல் நாடுகளிலிருந்து வருகிறது. அவற்றின் விலை புழுங்கலரிசியைவிட நூற்றுக்கு 20 அல்லது 30 பங்கு குறைவு. ஆகவே, கைக்குத்தரிசியை அதிகமாய் உற்பத்தி செய்து வியாபாரம் செய்வதற்கு அயல் நாட்டு மில் குத்திய அரிசி போட்டியாக நிற்கிறது. ஏழை ஜனங்கள் பொதுவாக விலை சரசமான இப்பச்சரிசையையேதான் வாங்குகின்றனர்.

நெல்லின் உமியும், தவிடும் உபயோகமுள்ளவை. உமியை மில்லில் போட்டு எரிக்கிருர்கள். கலப்பில்லாத நல்ல தவிட்டை மாடுகளுக்கு நல்ல ஆகாரமாக உபயோகிக்கலாம். கிராமங்களில் நல்ல தவிட்டை வெல்லத்துடனே அல்லது உப்புடன் சேர்ந்த மோரில் கலந்து ஜனங்கள் சாப்பிடுகின்றனர். அதுவும் நல்ல உணவுதான். மில்கள் வந்ததால் இவ்விரண்டும் ஜனங்களுக்குக் கிடைப்பது அரிதாயிருக்கிறது. வீட்டில் அடுப்பெரிக்கவாவது, அல்லது பல் தேய்க்க உமிக்கரியாவது செய்ய கிராமங்களில் நெல் உமி கிடைப்பது கஷ்டம்.



மர இயந்திரம்.

மேல் உமிமாத்திரம் போய் வைடயின் அதிலேயே இருக்குறது.

உங்களுக்குத் தெரியுமா?

நம்முடைய ஜனத்தொகை எப்படி அதிகமாயிற்று என்று நீர் அறிவீரா?:— பிப்ரவரி மாதக்கடைசியில் நம் தேசத்தில் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறார்கள், எந்த ஸ்திதியில் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க வீடு வீடாக கணக்கெடுக்கப் பட்டது. 1931ம் வருஷம் நம் தேசத்தில் 4,42,05,000 ஜனங்கள் இருந்தார்கள். 1941ம் வருஷம் அதாவது 10 வருஷத்தில் ஜனத்தொகை, 4,93,41,000-த்திற்கு அதிகமாயிற்று. அதாவது 12% 1931ம் வருஷத்திலும், 1941ம் வருஷத்திலும், பெண்கள் ஆண்களைவிட அதிகம். பெண்கள் ஆண்களைவிட 2,15,000 இப் பொழுது அதிகம். எல்லா ஜில்லாக்களிலும் ஏற்றுதல் அதிகம். சிறிய ஜில்லா வாகிய நீலகிரியில் 24% ஜனத்தொகை அதிகம். அடுத்தது மதராஸ் பட்டிணம் 20%. ஆந்திர ஜில்லாக்கள், விசாகப்பட்டணம், இரண்டு கோதாவரி ஜில்லா, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கடப்பா, கர்நூல், பெல்லாரி, அனந்தபூர், சித்தூர், பனகாவிபல்லி ஸமஸ்தானத்துடன் ஜனத்தொகை 1,88,29,000. தமிழ் தேசங் களில், அதாவது செங்கல்பட்டு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தென் ஆற் காடு, தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாடு, திருநெல்வேலி, நீலகிரி, புதுக்கோட்டையும் சேர்ந்து ஜனத்தொகை 2,47,57,000. மதராஸ் பட்டிணத்தி லுள்ள ஆந்திரர்களும், தமிழர்களும் சேர்ந்து 7,77,000.

* * *

எவ்வளவு ஜனங்கள் படிக்க எழுதத் தெரிந்தவர்கள் என்று நமக்குத் தெரியும். அப்பேர்பட்ட ஜனங்கள், தெலுங்கு ஜில்லாவில் 17,28,000 இருக்கிறார்கள். தமிழ் தேசத்தில் 32,63,000 பேர்கள் இருக்கிறார்கள். மதராஸில் 2,75,000 இருக்கி றார்கள். மதராஸில் மற்ற ஜாதிகள் 38%, தமிழ் ஜில்லாக்களில் 13%, தெலுங்கு ஜில்லாக்களில் 9½%.

* * *

மதராஸ் சில அடமான பாங்கிகளுக்கு அரசாங்கம் ஜாமீன் கொடுத்திருக் கிறது! இதுவரையில் அவர்கள் 2 கோடி 50 லக்ஷம் ரூபாய்களுக்கு வட்டி ஜாமீன் கொடுத்துவந்தார்கள். இப்பொழுது ரூ. 3 கோடி 10 லக்ஷத்திற்கு கொடுத்திருக் கிறார்கள்.

* * *

நம் தேசத்தில் பசுக்களின் எருவு வருஷத்திற்கு எவ்வளவு? விவசாயிகளுக்கு பசுக்களின் எருவே மூலாதாரம். விவசாயிகள் எருவிற்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள் என கணக்கிடப்பட்டது. 1937ம் வருஷத்தில் டாக்டர் அர் ஞல்ட் ரைட் 270 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டதாக கணக்கிட்டார்.

செய்தித் திரட்டு.

விசேஷங்களும் சமாசாரங்களும் விளிகொண்ட பஞ்சாயத்து போர்டார்களை இனி கிரிமினல் கோர்ட்டுகள் விசாரிக்கக்கூடாது என்று அரசாங்கத்தார் உத்திர விட்டனர்.

* * *

கொத்தூரி கிராமத்தில் ஒரு கோவாபரேடிவ் சங்கம் அனந்தபூர் ஜில்லாவி லுள்ள துண்டு நிலங்களை ஒன்று சேர்க்க ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது என்று கலெக்டர் பாஸ்கரராவ் நாயுடு கூறினர்.

* * *

டிஸம்பர் 31ந் தேதி முடிவில் அதாவது 34 மாதங்களுக்குள் விவசாயிகள் கஷ்ட நிவாரண சட்டப்பிரகாரம் ரூ. 5,78,83,8803-13-6 குறைப்பதற்கு தர்கித்தார்கள், ஆனல் அது ரூ. 3,04,83,335-9-7-க்கு குறைக்கப்பட்டது. அதாவது ரூ. 2,73,97,548-3-11 குறைந்துவிட்டது. அதாவது ஏறக்குறைய 43% குறைக்கப்பட்டது.

* * *

அகில இந்திய மாடுகள் சந்தை பிப்ரவரி மாதம் 17ந் தேதி புது டில்லியில் நடந்தது. 820 பசுக்கள், எருமைகள் இன்னும் சில மாடுகளும் வந்திருந்தது. 162 விதமாக 36 ஜாதிகள் பரீக்ஷிக்கப்பட்டன.

* * *

அமர்லிங்க பஞ்சாயத்து போர்டை லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் தற்காலத்திற்கு ரத்து செய்திருக்கிறார். மேற்சொன்ன பஞ்சாயத்து மெம்பர்கள் ஒன்றுகூடி, லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு கொடுத்திருக்கும். அதாவது தாங்கள் செய்த குற்றத்தை காண்பிக்காமலும், காரணம் விசாரிக்காமலும் பஞ்சாயத்துகளை தற்கால ரத்து செய்யும் அதிகாரத்தை ராஜாங்கம் அகற்றவேண்டும் என்று கூறினர்கள்.

* * *

இந்திய தேசத்தில் வேர்கடலை விவசாயிகள் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. யுத்தத்தினல் ஏற்றுமதி இல்லாமல் விலை குறைந்து விவசாயிகளுக்கு கஷ்டம் கொடுக்குமென்று அரசாங்கம் 1 டன் 10 சவரன்கள் வீதம் வாங்குவதாக நிச்சயித்தார்கள். ஆனல் மத்யஸ்தர்கள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக லாபமடைந்தார்கள். இதனல் விவசாயிகளுக்கு கஷ்டமுண்டாயிற்று.

* * *

பிரிட்டிஷ் அரசாங்கம் வாங்கும் விலையை குறைக்க எண்ணினர்கள். இந்திய சர்காரின் கோரிக்கைபடி அவர்கள் எண்ணத்தை விட்டுவிட்டார்கள். விவசாயிகள் விற்கும் விலைக்கும், பிரிட்டிஷார் வாங்கும் விலைக்கும் உள்ள வித்தியாசமுள்ள பணம் இந்தி ஸர்காரை சேர்ந்தது. ஆனல் அப்பணத்தை விவசாயிகளுக்கு திரிப்பி எப்படி கொடுப்பது என்பது ஒரு பெரிய கேள்வி. மத்யஸ்தம் செய்பவர்களுக்கு அப்பணத்தைக் கொடுக்காவிடினும் சில விவசாயிகளுக்கே அப்பணம் செல்லும்.

* * *

ஆகையினல் இந்தப்பணத்தையும், இனிமேல் மாகாண அரசாங்கமும் ஸமஸ்தானமும், கொடுக்கும் உபகாரப்பணத்தையும் நிதியாக ஏற்படுத்தி, குறைவாக வேர்கடலை சாகுபடி செய்ய ஒப்புத்துக்கொள்ளும் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும். மேற் கூறிய முறைபடி செய்தால் வேர்கடலை வளர்வு குறையும், விலை அதிகமாகாது என்று அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

பஞ்சாயத்து செய்திகள்.

நிர்மாணம்.

மதுரை ஜில்லா, பழனி தாலுக்கா, மர்கம்பட்டி பஞ்சாயத், (மர்கம்பட்டி, எளிய பட்டி, வத்தி ஆர்கம்பட்டி கிராமங்கள்), 11 மெம்பர்களும், தனி தயார் செய்த இடங்கள் 2. ம; பள்ளாரி ஜில்லா, ராயதுர்க் தாலுக், மங்கன ஹன்னு பஞ்சாயத்து, 9 மெம்பர்களும், தயார் செய்த இடங்கள் 2 வெஷ; கோயம்புத்தூர் ஜில்லா, கோபிச்செட்டி பாளயம் தாலுக்கா, காசிபாளயம் பஞ்சாயத், (மதன பல்லி கிராமம், தடபல்லி கிராமம்) 13 மெம்பர்களும் தயார் செய்த இடங்கள் 2 வெஷ; ராமனாதம் ஜில்லா, அறுப்பு கோட்டை தாலுக்கா, வடவர்பட்டி பஞ்சாயத்து, 8 மெம்பர்களும் தயாரான இடம் 1 வெஷ; திருச்சினாப்பள்ளி ஜில்லா, உடையார் பாளயம் தாலுக்கா, பில்ல பீலூசகுலி பஞ்சாயத் 8 மெம்பர்களும், தயாரான இடம் 1 வெஷ; குண்டூர் ஜில்லா, பல்லநாடு தாலுக்கா, துர்கி பஞ்சாயத் 12 மெம்பர்களும் தயாரான இடம் 1கி. 1ம.; மேற்கு கோதாவரி ஜில்லா, பீமாவரம் தாலுக்கா திருசுமனு பஞ்சாயத் 9 மெம்பர்களும் தயாரான இடம் 1வெஷ; 1கி, சித்தூர் ஜில்லா, காளஹஸ்தி தாலுக்கா பில்லமேடு பஞ்சாயத்து, 8 மெம்பர்களிலிருந்து 9 மெம்பர்களும், 1 வெஷட்யுலுகளுக்கும் இடம் தரப்பட்டது.

தற்கால ரத்து.

கர்நூல் ஜில்லா வரவகல்லு பஞ்சாயத், 4-3 41ல் இருந்து ஒரு வருஷம். மேற்கு கோதாவரி ஜில்லா, நர்ஸாபுரம் சஞ்சாயத் 4-2 41ல் இருந்து ஒரு வருஷம். திருநெல்வேலி ஜில்லா, தென்காசி பஞ்சாயத் போர்ட், 12-3-41ல் இருந்து மூன்று மாதங்கள்.

ரத்து.

ராமனாதம் ஜில்லா, சிவகங்கை தாலுக்கா, பகநேரி பஞ்சாயத் (கக்ஷி விரோதத்தினால்). வட ஆர்காடு ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா, சிங்காணபல்லி பஞ்சாயத் (வருமானம் குறைவு). சேலம் தாலுக்கா, தர்மாபுரி தாலுக்கா, எறபெயின ஹள்ளி பஞ்சாயத் (குறைவு வருமானம், வேலை இல்லாமை). கடமேடை பஞ்சா யத் (குறைவு வருமானம், படித்தவர்களில்லை); திருச்சினாப்பள்ளி ஜில்லா, முசிரி தாலுக்கா, டீரங்கனாதபுரம் பஞ்சாயத் (கக்ஷி விவாதம்).

கிறம சேர்மானம்.

விசாக பட்டணம் ஜில்லா, ஸர்வ ஸித்தி தாலுக்கா, ஸத்யவரம் பஞ்சாயத் (+ சாஹயபு பேட்டை). தக்ஷிண கன்னட ஜில்லா, புத்தூர் தாலுக்கா, பெல்லி பாடி பஞ்சாயத் (+ கொடும்பாடி). சேலம் ஜில்லா, ஹோஸூர் தாலுக்கா, ஹோஸூர் பஞ்சாயத் (ஹோஸூர் + சென்னத்தூர் மஜிரா குடாவளி). மலபார் ஜில்லா, கேலிகட் தாலுக்கா, பொடுவல்லி பஞ்சாயத் (+புத்தூர்).

கிறும பிரிவு.

சங்கரா புரம்—ராவி மெட்ல பஞ்சாயத் போர்டிலிருந்து உனகா யில்லி கிறுமத்தை பிரித்தார்கள்.

பிரஸிடேண்டுகள் பிரிவு.

அனந்தபுரம் ஜில்லா, தர்மாவரம் தாலுக்கா, தாமு செல்ல பஞ்சாயத், பிரஸிடென்ட் ஸ்ரீ பி. மல்லா செட்டி (1) பாங்கியில் பணம் போடாததினால், (2) அஸிஸ்டென்ட் பஞ்சாயத் ஆபிஸர்கள் கேட்டபோது மீதி இருக்கும் பணத்தை காட்டாததினால், அரசாங்கம் அவரை தள்ளிவிட்டது. குண்டூர் ஜில்லா, சத்தினபல்லி தாலுக்கா, கணபவரம் பஞ்சாயத்து, வயஸ் பிரஸிடென்ட் நியாய பிரகாரம் ஐந்து தினங்கள் முன்னதாக பிரஸிடென்ட் தேர்தலை தெரிவிக்காததினால் தள்ளப்பட்டார்.

முனிஸிபல் சட்டம் விசாலம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா, குளித்தலை பஞ்சாயத்து, 97ம் பாகத்தை சார்ந்த வரையிலும் 313 பாகம், VII ஷெ.

மதுரை ஜில்லா, திருமங்கலம் பஞ்சாயத், 97ம் பாகத்தைச் சார்ந்தவரையில் 313, VII ஷெ.

தென் ஆர்காட் ஜில்லா, சங்கராபுரம் ஜில்லா, 97ம் பாகத்தை சார்ந்த வரையிலும் 313, VII ஷெ.

சேலம் ஜில்லா, கிருஷ்ணகிரி பஞ்சாயத், பிரிவு 249 அதை சார்ந்தவரையில், ஷெ. 5, களாஸ் 6 இதைச் சார்ந்தவரையிலும், பிரிவு 313, 338, ஷெ. 7ம் 8ம்.

பிரேஷன் ஆப் பப்பிளிக் ரிபோர்ட் ஆக்ட் விசாரிப்பு.

கோயம்புத்தூர் ஜில்லா, அன்னூர் பஞ்சாயத்துக்கு, தென்ன ஆர்காடு ஜில்லா மெல்லாணியூர் பஞ்சாயத்துக்கு.

கடிதங்கள்.

பஞ்சாயத்தின் வேலைகள்—ஜில்லா போர்ட் வாஸ்துவித்தை ஸிப்பந்தி.

கொடிபல்லி பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட ஸ்ரீ. ஜி. கொண்டலராவ் பஞ்சாயத்து வேலைகள்—ஜில்லா போர்ட் வாஸ்துவித்தை ஸிப்பந்திகளைப்பற்றி இப்படி எழுதுகிறார் :—

இந்த ராஜாங்கத்தார்கள் பஞ்சாயத்தின் வேலைகளுக்கு எஸ்டிமேட் தயார் செய்யும் விதத்தை பார்ப்பதற்கு ஒரு ஜீ ஓ. வை அனுப்பிவைத்திருக்கிறார்கள் அந்த ஜீ. ஓ. வில் பஞ்சாயத்து போர்ட் வரி முதலானவைகள் கட்டுவேதற்கும், வேலைதன் பூர்த்திசெய்வதற்கும், காலம் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் இஞ்சினியரிங் டிபார்ட்மெண்ட்டவர்களுக்கு மாத்திரம் எஸ்டிமேட் தயார் செய்வதற்கு காலம் குறிக்கப்படவில்லை. ஆனாலும் இந்த டிபாரட்மெண்ட் இனிஷியல் டிபாஸிட் கட்டி 8 மாதமானாலும் எஸ்டிமேஷன் தயார் செல்யவில்லை. அது அவர்கள் இஷ்டத்திலிருக்கிறது ஓவர்சியரிடமும், இஞ்ஜினியரிங் ஸ்கூடனி ஆபிசிலிருக்கும் பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் தயார் செய்யும் எஸ்டிமேட்டும் ஜில்லா போர்ட்டைச் சார்ந்த மெம்பர்களுடைய அதிகாரத்திலிருந்த கிராமங்களுடைய போர்டுகள் தயார்

செய்த எஸ்டிமேட்டுகள் மாத்திரம் சேர்வதென்றும் கேட்கிறோம். எஸ்டிமேட் செய்யப்பட்ட வரவு சிலவு கணக்குகள் பிரகாரம் வேலை நிமித்தம் பஞ்சாயத்து போர்ட் பணம் சிலவழிப்பதில்லை என்று மேல் உத்தியோகஸ்தர்கள் குறைகள் கூறுகிறார்கள். வேலை செய்யும் விதத்தை அறியாததினால் போர்டுகளில் அதிக பணம் நிலவப்பட்டிருக்கிறதென்று ஆக்ஷேபிக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் மேல் சொல்லப்பட்ட காரணங்கள்தான் காரணம். இதுவரையிலும் பஞ்சாயத்திற்கு தனியாக ஓவர்சியர்களிருந்தனர். இப்பொழுது பஞ்சாயத்து வேலைகள்கூட ஸெக்ஷனல் ஓவர்சியர்களுக்கு கொடுக்கப்பட்டன. ஆகையினால் பஞ்சாயத்தின் கஷ்டத்தைப்பற்றி சிறிது சொல்லவேண்டியதில்லை அல்லவா!

பஞ்சாயத்து விருத்தியடைய வேண்டுமானால் அவைகளின் வேலைகளுக்கு எஸ்டிமேட்டுகளும் பில்லுகளும் தயார் செய்வதற்கு ஜில்லா போர்ட் இஞ்சினீயரிங் ஸிப்பந்திகளுடன் சம்பந்தமில்லாமல், தனி ஸிப்பந்திகள், அதாவது ஓவர்சீயர்கள், ஜில்லாவுக்கு ஒரு உதவி இஞ்சினீயர் இருக்கவேண்டும் என்பது அவசியம்.

பஞ்சாயத்து போர்டுகள்—பரிபாலன முக்ய விஷயங்கள்.

பிரசிடேண்ட்:—ஸ்ரீ. வி. சத்ய நாராயண பட்ணாயக்காரு.

சந்த உருட்டி பஞ்சாயத்து போர்ட், சிப்ருபல்லி தாலுக்கா, விசாகப்பட்டணம் ஜில்லா.

பஞ்சாயத்தின் நிர்மாணங்கள் பலசித்தியடைய வேண்டுமானால் பஞ்சாயத்தில் நிர்வகிக்கக்கூடிய காரியங்கள் அமுலுக்கு வரும் விதானத்தை அறியவேண்டும். அதற்கு (1) பஞ்சாயத்தின் நிலத்தில் வசூலிக்கும் வரிவிதி, மற்ற விதிகளும் பஞ்சாயத்திற்கே சேரவேண்டியது. அதில் ஜில்லா போர்டார்கள் பாகங்கள் அடையக் கூடாது. (2) பஞ்சாயத்து பிரதேசத்தில் இருக்கும் ஔஷதாலயங்களும், பாடசாலைகளும், பப்ளிக் ரஸ்தாக்களும், பஞ்சாயத்தின் அதிகாரத்திற்குள் இருக்க வேண்டும். அவைகளுக்கெல்லாம் ராஜாங்கம் கொடுக்கும் உபகாரம் பஞ்சாயத்திற்கே சேரவேண்டும். (3) ராஜாங்கம் ரஸ்தா வசதிகள், ஜல வசதிகள் ஆகியவைகளுக்கு 2/3 உபகாரம் செய்யவேண்டும். (4) தங்கள் சொந்த பணத்தால் தங்களைக் காப்பாற்ற முடியாத பஞ்சாயத்துகளுக்கு, ராஜாங்கமும், ஜில்லா போர்டுகளும் உதவி புரியவேண்டும். (5) பஞ்சாயத்தினால் விதிக்கப்பட்ட வரிகள், லைசென்ஸ் பணங்கள், வகையராக்கள் நிலவரி விதியைப்போல் கிராம உத்தியோகஸ்தர்களில் வசூலிக்கப்படவேண்டும். இவ்விதமாக பஞ்சாயத்துகளுக்கு அதிகாரிகளுடைய ஆதரவும் செல்வாக்கும் கிடைத்தால்தான் பஞ்சாயத்தின் சுகத்தை ஜனங்கள் அடைவார்கள். நிராகரிக்கப்பட்ட பஞ்சாயத்தின் தீர்மாணங்கள் உபயோகமற்றவை.

கிராம பஞ்சாயத்தின் பத்திரிகையை ஆதரிக்கவும்.

கிராம பஞ்சாயத்துக்களுடைய சீர்திருத்தத்திற்காக சென்ற மூன்று வருடமாக பட்ட கஷ்டம் உலகக்யாதிபெற்றது. 1938ம் வருஷம் ஜனவரி மாதம் மாகாண பஞ்சாயத்து சபையை கூட்டி மாகாண யூனியன் ஒன்றை ஸ்தாபனம் செய்து மாத பஞ்சாயத்து பத்திரிகையை வெளிப்படுத்தி, அதன் மூலமாக எல்லா பஞ்சாயத்துகளுக்கும் போதிக்கின்றார்கள். பத்திரிகையை பிரசுரிப்பதற்கு உத்ஸாகம் வேண்டும். உத்ஸாகமற்ற எக்காரியமும் நிரந்தரமாய் நடக்காது. இவ்விஷயத்தில் உத்ஸாகம் கொடுப்பதற்கு பஞ்சாயத்து போர்டுகளே ஆதாரமாக இருக்கின்றன. மாகாணத்திலுள்ள பஞ்சாயத்துகள் எல்லாம் மாகாண பஞ்சாயத்து யூனியனுக்கு சகாயம்செய்து பஞ்சாயத்து பத்திரிகை மூலமாக இப்பொழுதிருப்பதைக்காட்டிலும் அதிகமாக போதனை செய்யவேண்டும்.

ஜில்லா சங்கங்களை ஏற்பாடு செய்யுங்கள்.

ஒவ்வொரு ஜில்லாவிலேயும் இருக்கின்ற பஞ்சாயத்துகள் யாவும் ஒன்று கூடி ஜில்லாசங்கத்தை ஏற்பாடு செய்து அதிலிருந்து மாகாண யூனியன் மூலமாக

செய்யவேண்டிய சீர்திருத்தங்களை சர்க்காருக்கு தெரிவிப்பதால் காரியம் கைகூடும். மாகாண ஜில்லா சங்கங்கள் பஞ்சாயத்துகள் யாவிற்கும் சீர் திருத்தங்கள் செய்வதில் கைக்கோலாக இருக்கும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் வருஷத்திற்கு ரூ. 4 மற்றும் சிலவழித்தால் அதிலிருந்து மாகாண சங்கத்திற்கு ரூ. 2-ம் ஜில்லா சங்கத்திற்கும் ரூ. 2 போவதினால் மாகாண, ஜில்லா சங்கங்கள் காரியங்கள் ஜயத்துடன் நடக்கப்படும். குண்டூர் ஜில்லாவில் பஞ்சாயத்துகள் யாவும் ஒன்று சேர்ந்து ஜில்லா சங்கத்தை ஏற்பாடுசெய்து அதன் மூலமாக செய்யவேண்டிய சீர்திருத்தங்களை மாகாண பஞ்சாயத் யூனியனுக்கு தெரிவிக்கின்றனர். அதன் பிரகாரம் மற்ற ஜில்லாக்களும் செய்யவேண்டுமென்று கோருகிறோம்.

பஞ்சாயத் போர்டுகளும் காரியக்கமிட்டி ஆபிஸர்களும்.

(ஸ்ரீ—க. ராமமூர்த்தி, குண்டூர் ஜில்லா பஞ்சாயத் யூனியன் காரியதரிசி.)

மதராஸ் மாகாணத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கு கிராம சீர்திருத்தம் 1920 வருஷத்தில் கிராம பஞ்சாயத்து சட்டமாக ஆரம்பமாகிவிட்டது. கிராம பஞ்சாயத்து சட்டத்தின்படி ஆளப்பட்ட இந்த மாகாணத்தில் 5,700 கிராம பஞ்சாயத் போர்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு பொது ஜனங்களுக்கு உபயோகமுள்ள காரியங்கள் செய்யபடுகின்றன. அப்பொது சில வசதி இல்லாவிட்டாலும், கேழ்கப்பட்டவுடனே ஸர்க்கார் ஏராளமாக பணத்தை கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ரிஜிஸ்தரார் ஜெனரலாய் இருந்த திவான் பகதூர் கோபாலஸ்வாமி ஐயங்காரும், ரூரல் போர்டும் பஞ்சாயத்துகளை பரீக்ஷிப்பதைக்காட்டிலும் உத்ஸாகத்தைக் கொடுப்பது தங்களுடைய கடமையாக நினைத்து ஒவ்வொரு வருஷமும் சில ஜில்லாக்களில் பஞ்சாயத்துகளுக்கு ஏராளமாக பணத்தை கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் 1930ம் வருஷம் மதராஸ் லோகல் போர்ட் சீர்திருத்தம் சட்டம் ஏற்பாடு செய்து பஞ்சாயத்து சட்டத்தை ரத்து செய்ததினால் சிலவசதி யிருந்தும் முன்பு செய்த வேலையில் பாதி வேலையாவது செய்ய முடியவில்லை. பஞ்சாயத்துகளுடைய எண்ணிக்கை அதிகமாகாமல் குறைந்தது. இதற்கு காரணம் சர்க்கார் தவிர, பொது ஜனங்களின் மூடத்தன்மையல்ல. இதற்கு காரணம் ஜனங்களுக்குள் பல விதமான கக்ஷிகள் ஏற்படுவதுமல்ல, ஸர்க்காருடைய பஞ்சாயத் போர்ட் இன்ஸ்பெக்டரும், மற்றுமுள்ள அதிகாரிகளும் பஞ்சாயத்துகளை நடத்துவதற்கு பதில், அதை பரிசீலிப்பதும், பரிக்ஷிப்பது மாத்திரமே செய்வதினால் அதில் வேலை செய்பவர்களுக்கு உத்ஸாகம் போய் விடுகின்றது.

பஞ்சாயத் போர்ட்களுடைய அதிகாரிகளும், அக்கிராமவாசிகளும் மூடத்தன்மையினால் பஞ்சாயத்துகளுக்கு வழி காட்டுவதற்காக ஒரு அதிகாரி அவசரமென்ற எண்ணத்தை நான் எதிர்பதற்கு அதிகாரிகள் என்னை மன்னிக்க வேண்டும். இம்மாதிரியான என்னம் இன்ஸ்பெக்டர் அவர்கள் மிகவும் விளக்கமாக பரிக்ஷித்து சொல்லியதாக நான் அங்கீகரித்துக்கொள்ள முடியாது.

காரியக்கமிட்டியை நியமிப்பதற்கு குறைவாக பணம் வரும் பஞ்சாயத்து போர்டுகளுக்கு கஷ்டம். அம்மாதிரி வந்த பணம் அவர்களுக்கு சம்பளம் குடுப்பதற்கு உபயோகப்படுவது அல்லாமல் ஜனங்களுடைய ஆதரவுக்கு தூரமாகும். ஜனங்களுடைய ஆதரவில்லாத பஞ்சாயத்துகள் இல்லாதிருப்பதே மேல்.

இப்பெழுதும் சில கிராமங்களில் பஞ்சாயத்துகள் வேறுவிதமாக வரவு இல்லாமலும் ஜனங்களுடைய ஆதரவினால் பொது ஜனங்களுக்கு உபயோகமுள்ள காரியங்கள் செய்து வருகின்றனர். காரியக்கமிட்டி ஏற்பாடு செய்வதினால் பணம் செலவாவது மல்லாமல் ஐக்யத்தன்மை கெட்டு பஞ்சாயத்தே நாஸமாகும்.

அதனால் இம்மாதிரி ஒரு எண்ணத்தை ஸர்க்கார் இத்துடன் மறந்து இதை சார்ந்த விஷயங்களை மாகாண பஞ்சாயத்து போர்டு கேட்கும்படி செய்ய நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க உத்தரவுகள்.

மீன்கள் ஏலம் போடுவதற்கு சம்பந்தமான அதிகாரங்கள்.

ஜி. ஓ. நம்பர் 261, எல். ஏ. (1-2-1941).

முன்பு பஞ்சாயத்துகளின் பரிபாலனத்திற்காக செய்யப்பட்ட ரூல் நெ. 159க்கு பதிலாக கீழ்வரும் நிபந்தனைகள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்.

159. (1) மீன்களின் ஏலவிற்பனை சம்பந்தமாக குளங்கள் கீழ் சொல்லியவாறு பிரித்து விடவேண்டும்.

(a) பஞ்சாயத்துகளுக்கு குடிப்பதற்காக குளங்கள்,

(b) மீன்களின் சம்பந்தமான டிபார்ட்மெண்டால் ரிவின்யூ அல்லது பி. டபில்யூ. டிபார்ட் மெண்டுகளிடமிருந்து, மீன்களின் அபிவிருத்திக்காக எடுத்துக்கொள்ள பட்ட குளங்கள்,

(c) 10-2-1914க்கு முன்பு வெட்டப்பட்டு பி. டபில்யூ. டிபார்ட் மெண்டால் வைத்துக்கொள்ளப்படும் குளங்கள் விவசாயத் தொழிலிக்காக,

(d) 20-2-1914 தேதியிலிருந்து பி. டபில்யூ டிபார்ட்மெண்டால் வெட்டப்பட்டு அல்லது அவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் குளங்கள் விவசாயத்திற்காகவும்,

(e) 20-2-1914 முன்னால் பி. டபில்யூ டிபார்ட்மென்டாரின் ஆதிக்கத்திலில்லாமலோ அல்லது அவர்களால் வெட்டப்படாமலோ ரிவின்யூ டிபார்ட்மெண்டார்களின் நிர்மாணத்தில் இருக்கும் குளங்களும் விவசாயத்தொழிலிற்காக,

(f) குடிப்பதற்கும், விவசாயத்தொழிலிற்லிம், உபயோகசரமாக செய்யாமல் பஞ்காயத்துகள் நிர்மாணத்திலுள்ளது.

(g) பஞ்சாயத்தின் ஆதிக்கத்திலில்லாமலும், ஒருவருக்கு சொந்தமில்லாமலும், விவசாயத்தொழிலிற்குமில்லாமலிருக்கும் குளங்கள்,

(h) பஞ்சாயத்துகள் தீர்மானிக்கப்பட்ட குளங்சன் பஞ்சாயத்துக்காரர்கள் சேர்ந்தது.

(2) (a) மேல்கூறிய ஸப்ரூல் (1)ல் (a to g) இனாகலோ சொல்லி இருக்கும் எல்லா குளங்களுக்கு சம்பந்தபட்ட மீன் விற்பனை ரிவின்யூ டிபார்ட்மெண்டாவது மதராஸ் கவர்ன்மெண்டாராலாவது அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அவைகளை ஏலம் செய்து பணத்தை வசூலிக்கவேண்டும்.

(b) ரூல் 2 டிவிஷன் aல் சொல்லப்பட்ட பிரகாரம் பணத்தை வசூலித்து தாலூக்காளில் சேர்த்து விடவேண்டும். அப்பொழுது தாவில்தார் பஞ்சாயத்திற்கு எவ்வளவு பணம் சொந்தமென்று அவரிடும் நிர்மானித்தில் தெரியப்படுத்த வேண்டும்.

(3) ரூல் (1)ல் (h) டிவிஷனில் சொல்லிய பிரகாரம் பஞ்சாயத்தக்காரர்களே அவர்களுடைய குளங்களை ஏலமிட்டு அப்பணத்தை தங்கள் கஜானாவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(4) மேற்கூறிய நிபந்தனைகள் மற்ற ஜலாதாரங்களைக்கூட சம்பந்திக்கின்றன.

மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

லைசனு பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

இப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு :

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடெண்டு :

ஆனரபிள் மிஸ்டர். வி. ராமதாஸ் பந்துலு.

ஸெக்ரடேரி :

டி ராகேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள் டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்னு, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.